DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 85/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராதிகா (P.w.6 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of October 2025

(3 வது எதிரி ஆஜர் இல்லை 3 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கண்டுகொண்டான்மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். 2019 ம் வருடம் 10 வது மாதம் தேதி ஞாபகமில்லை மதியம் 12 மணியளவில் செல்வம் என்பவரை கோயில்பிள்ளை வகையறா ஆட்கள் அடித்த சம்பவத்திற்காக சம்பவ இடத்தில் நரிக்குடி போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். ( **பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

நான் கையொப்பம் செய்த தேதியானது 05.10.2019 ம் தேதி என்றால் சரிதான். மாலை 4 மணி இருக்குமா என்றால் ஆமாம். சம்பவஇடத்தில் வைத்து நரிக்குடி போலிசார் மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்து என்னிடமும், சுகன்யாவிடமும் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

**எ.த.கு.வி –**

அசா1 செல்வம் எனது மாமானார் ஆவார். போலிசார் கேட்டுக் கொண்தற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் சம்பவம் குறித்து நான் சொன்னவற்றை எழுதி அதில் நான் கையொப்பம் செய்தேன். கையொப்பம் செய்வதற்கு முன்பு அதில் என்ன எழுதி இருந்தது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் 3 கையொப்பம் செய்தேன். சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் அசா1 எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 85/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **வேளாங்கண்ணி என்ற எஸ்தர்வேளாங்கண்ணி** (P.w.5 ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of October 2025

(3 வது எதிரி ஆஜர் இல்லை 3 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கண்டுகொண்டான்மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 04.10.2019 ம் தேதியன்று மதியம் 1 மணியளவில் கோயில்பிள்ளை என்பவர் எனது வீட்டிற்கு அருகில் காலாங்கரை செல்லும் இடத்திற்கு வந்து அந்த காலாங்கரை இடத்திற்கு பட்டா போட்டு தரச் சொல்லி எனது பெரியப்பா செல்வத்திடம் தகராறு செய்தார். முறையாக வட்டாட்சியர் அலுவலத்திற்கு போகச்சொல்லி செல்வம் சொன்னார். கோபமடைந்து நீ போட்டு தர நினைத்தால் போட்டுத்தரலாம் என்று சொல்லி கம்பியால் கோயில்பிள்ளை செல்வத்தை அடித்துவிட்டார். பின்னர் சூசை

கம்பால் செல்வத்தை அடித்தார். சேகர் என்பவர் கட்டையால் அடித்தார். அந்தோணி மரியாள் கல்லால் எனது பெரியப்பாவை எறிந்து அசிங்க அசிங்கமாக திட்டினார். காயங்கள் நிறைய ஏற்பட்டதால் ஆட்டோவில் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு செல்வத்தை அனுப்பி வைத்தோம். பின்னர் செல்வம் தரப்பினர் காவல் நிலையம் சென்றுள்ளார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கண்டுகொண்டான் மாணிக்கத்தில் உள்ள குறிப்பிட்ட இடத்திற்கு செல்வத்தின் மகன் குமார் ஊராட்சி செயலராக இருந்து அவர் அந்த இடத்திற்கு நிலவரி ரசீது போட்டுக் கொடுத்தார், நான் பட்டா வாங்கிவிடுவேன் என்று செல்வத்தை பார்த்து மரியசூசை கேட்டார் என்றால் புறம்போக்கு இடத்திற்கு ரசீது போடமுடியாது வட்டாட்சியர் அலுவலகத்திற்கு போகச்சொன்னார்.

**எ.த.கு.வி –**

அசா1 செல்வம் எனது பெரியப்பா ஆவார். சம்பவ சமயத்தில் நான் அருப்புகோட்டையில் குடியிருந்து வந்தேன் என்றால் சரியல்ல, கண்டுகொண்டான் மாணிக்கத்தில்தான் குடியிருந்தேன். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். ஊராட்சி செலளருக்கு பட்டா வழங்கும் அதிகாரம் இல்லை என்றால்சரிதான். புறம்போக்கு இடத்திற்கு ரசீது வழங்க அதிகாரம் இல்லை என்றால் சரிதான். முழங்கை, கால் மற்றும் முதுகு , தலை பகுதியில் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். காயம்பட்டவரை ஆட்டோவில் அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். ஆட்டோவில் எங்கு சென்றார்கள் என்றால் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். யார் யார் உடன் சென்றார்கள் என்றால் எனது பெரியப்பா செல்வம், ஆரோக்கியம், இஸ்ரவேல், எனது அத்தையும் சென்றார்கள். எனது பெரியப்பா செல்வம் ஒருவாரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அன்றையதினமே

மருத்துவமனையில் போலிசார் விசாரித்தார்களா என்றால் நான் மறுநாள் மருத்துவமனை சென்றேன் அப்போது போலிசார் விசாரித்தார்கள். நான் இருக்கும்போது புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அன்றையதினம் எதிரிகளை செல்வம் வகையறா தாக்கியதாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். காயம் என்னனென்ன காயங்கள் என்று மருத்துவரை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான். சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால்சரியல்ல. செல்வம் வகையறாதான் எதிரிகளை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் அவர்கள் புகார் கொடுப்பார்கள் என்று பயந்து அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றாலும் நான் சம்பவ சமயத்தில் அருப்புக்கோட்டையில் குடியிருந்தேன் என்றாலும் சரியல்ல. அசா1 எனது பெரியப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 85/2022**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **ஆரோக்கியம் (P.w.4 )** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of October 2025

(3 வது எதிரி ஆஜர் இல்லை 3 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது . மற்ற எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கண்டுகொண்டான்மாணிக்கத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அந்தோணி மரியாளை தெரியும். கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் மதியம் 1.30 மணி இருக்கும் கண்டுகொண்டான்மாணிக்கத்தில் உள்ள குமார் என்பவரின் வீட்டை ஒட்டி புறம்போக்கு இடம் உள்ளது. ஜான்குமார் என்பவர் கிளார்க்காக இருந்த அந்த இடத்தை பட்டா போட்டு கொடுக்கமாட்டுகிறார் என்று எதிரிகள் அனைவரும் சேர்ந்து ஜான்குமாரின் அப்பா செல்வத்திடம் தகராறு செய்து கோயில்பிள்ளை என்பவர் கம்பியை எடுத்து செல்வம் என்பவரது உடம்பில்

அடித்துவிட்டார். சூசை என்பவர் கட்டையால் கோயில்பிள்ளையை உடம்பில் அடித்தார். அந்தோணி மரியாள் செல்வத்தின் மீது கல்லால் எறிந்தார். சேகர் தகாத வார்த்தையால் செல்வத்தை திட்டினார். இதை அருகில் இருந்து நான் பார்த்தேன். பின்னர் செல்வம் தரப்பினர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தனர். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

செல்வம் தரப்பினர் எதிரிகள் மீது புகார் கொடுத்து அதன்பின்பு போலிசார் அழைத்தற்கு இணங்க நானும் சென்ற பிறகு காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

அசா1 செல்வம் எனது மைத்துனர் என்றால் சரிதான். பிரச்சனைக்குரிய இடங்களும் அதற்கு அருகில் உள்ள இடங்களும் எங்கள் ஊரில் உள்ள தேவாலயத்திற்கு சொந்தமான டிரஸ்டிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அதை அனைத்தையும் பகுதியாக பிரித்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சம்பவம் நடந்து 10 நிமிடத்தில் வந்திருப்பேனா என்றால் சரிதான். அன்றையதினம் புகார்தாரர்கள் தாக்கியதாக இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்தவுடன் செல்வம், செந்தில்குமார் ஆகியோர் காவல் நிலையம் எவ்வாறு சென்றார்கள் என்றால் நடந்து சென்றார்கள். அங்குபுகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் நேரம் ஞாபகமில்லை. அன்றையதினமே சென்றுவிட்டேனா என்றால் சென்றுவிட்டேன். போலிசார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் கேட்டார்கள் நான் நடந்ததை சொன்னேன். நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலிசாரிடமும்

சொன்னேன். அன்றையதினம் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் நினைவு இல்லை. சம்பவ தினத்தில் எதிரிகளை செல்வம் தரப்பினர்தான் தாக்கி காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றாலும் அவர்கள் புகார் கொடுத்ததினால் வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக ஒரு புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. அசா1 எனது  மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.